கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, அண்ணா அறிவாலயத்தில் மதுரை மாநகராட்சி முன்னாள் மேயர் பெ.குழந்தைவேலு தனது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர்கள் கே.என்.நேரு, ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் உள்ளனர்.

கழகத் தலைவர், நெ.1. முதல்வருக்கு பிறந்தநாள்: காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் எழுச்சிமிகு விழாக்கள்!

மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை. பிப்.16

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் நெ.1. முதலமைச்சருக்கு பிறந்தாள் விழா கொண்டாட்டம் குறித்து காஞ்சி தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானம் குறித்து மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு வருமாறு:-

கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாளையொட்டி காஞ்சி தெற்கு மாவட்டம் முழுவதும் வார்டு கிளைகள் தோறும் மார்ச் 1 அன்று கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்கி அறுசுவை உணவு வழங்குதல். தங்கம் மோதிரம் அணிவித்தல். அதனை தொடர்ந்து 72 தொடர் பொதுக் கூட்டங்கள். மருத்துவ முகாம். மரக்கன்று நடுதல். விளையாட்டுப் போட்டிகள் எழுச்சியோடு நடுத்துவது என காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளது என்று மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டம். கலைஞர் பவளவிழா மாளிகையில் 15.02.2025 அன்று சனிக்கிழமை மாலை 4 மணியளவில் மாவட்ட கழக அவைத்தலைவர் ச.இனியரசு தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களை மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வரவேற்று பேசினார்.

மாவட்ட துணை செயலாளர்கள் டி.வி.கோகுல கண்ணன். க.செல்வம் எம்.பி. திருமதி. கு.மலர்விழி, மாவட்ட பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆர்.டி.அரசு, எம்.எஸ்.சுகுமார், மாநில தொண்டரணி ஜி.சுகுமாரன், மாநகர செயலாளர் சி.கே.விதமிழ்ச்செல்வன், காஞ்சிபுரம் மேயர் திருமதி.மகாலட்சுமி யுவராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் வெளிக்காடு ஏழுமலை, எஸ்.சிகாமணி, எஸ்.கே.ராஜேந்திரன், எஸ்.உசேன், பொன்.சசிக்குமார், மதுராந்தகம் நகர செயலாளர் கே.குமார், ஒன்றிய செயலாளர்கள் கெ.ஞானசேகரன்,பி.எம்.குமார், பி.எம்.பாபு, டி.குமார், பி.சேகர், க.குமணன், பொன்.சிவக்குமார், சத்தியசாய், கே.கண்ணன், எம்.எஸ்.பாபு, இ.சரவணன், ஏ.சிற்றரசு, காஞ்சிபுரம் மாநகர பகுதி செயலாளர்கள் எஸ்.சந்துரு, கே.திலகர், அ.தசரதன், சு.வெங்கடேசன், காஞ்சிபுரம் மாநகர நிர்வாகிகள் கே.ஏ.செங்குட்டுவன், வ.ஜெகநாதன், கே.சுப்புராயன், பேரூர் செயலாளர்கள் என்.எஸ்.பாரிவள்ளல், என்.பாண்டியன், சுந்தரமூர்த்தி, மோகன்தாஸ், வி.எழிலரசன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் நாத்திகம் நாராஜன், வ.மலர்மன்னன், ஆ.செல்வி, இ.அசோகன், ஆ.சசிகுமார்,வ.வெங்கட்ராமன், எஸ்.மாலதி, டி.ஜெய்கணேஷ், கே.ஏ.இளங்கோவன், கலைச்செல்வி ஜெகநாதன், முடிவில் மாவட்ட கழக செயலாளர். க.சுந்தர். எம்.எல்.ஏ. தீர்மானங்களை விளக்கி பேசினார்.

தீர்மானம் 01

தமிழ்நாடு, தமிழ் மொழி, தமிழ் மக்கள், முன்னேற்றத்திற்காகவே தன்னை ஒப்படைத்து இன்றும் ஏழை எளியவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காகவே தன்னை ஒப்படைத்து அவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றி வைத்திட அரசின் சார்பில் பல்வேறு சமூக நலத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வரும் திராவிட இயக்க வழித்தோன்றால். நான்காம் தலைமுறை. திராவிட மாடல் அரசின் நாயகர் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளில் அவர் பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் வாழ்த்துகிறது.

தீர்மானம் 02

சென்னை கோபாலபுரத்தில் தி.மு.க இளைஞர் அணி என்று ஒரு அமைப்பினை முதன் முதரில் உருவாக்கி பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவினை நடத்திட அப்போதே முழு வீச்சில் செயல்பட்டவர். கழகமே தனது உணர்வு. கழகத் தோழ்களே தனது சகோதர சகோதரிகள் என்று கழகமே தனது மூச்சு என்று அன்று முதல் இன்று வரையில் பல்வேறு சமூக நலத் திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வரும் முதல்வர் மு.க.ஸ்டாரின் அவர்களின் பிறந்த நாளை நம் மகிழ்வோடு கொண்டாடுவதைப் போன்று. மார்ச் 1 அன்று ஏழை எளிய மக்களும் மகிழ்ச்சியுடன் திகழ்ந்திடும் வகையில் அனைவருக்கும் தேவையான வேண்டிய உதவிகளை செய்திடுவோம் என்று இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

தீர்மானம் 03

இந்தியாவை இதுவரை எந்த ஆட்சியும் செய்யாத வகையில் ஓர வஞ்சனை ஆட்சி. பாசிச. ஆட்சி. ஓர வஞ்சனை ஆட்சியை பா.ஜ.க நடத்திக் கொண்டிருக்கிறது. குறிப்பாக எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களை புறக்கணித்து பா.ஜ.க ஆட்சி செய்யும் மாநிலங்கள். அவர்களுக்கு தோள் கொடுத்து ஆட்சியைக் காப்பாற்றி கொண்டிருக்கும் மாநிலங்களுக்காவே இந்த ஆண்டு பட்ஜெட்டை ஒன்றிய பா.ஜ.க. அரசு தாக்கல் செய்துள்ளதோ என்று அனைவரும் எண்ணிடம் வகையில் இன்றைக்கு ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறது. இதனை இந்தியாவிலேயே துணிச்சலுடன் எதிர்த்து சுட்டிக் காட்டி. கண்டனம் தெரிவித்த நமது கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் தனது பாராட்டினையும் நன்றியையும் தெரிவித்து தீர்மானிக்கிறது.

தீர்மானம் 04

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் மார்ச் 1 அன்று காலை மாநகரம். ஒன்றியம். நகரம். பேரூர். கிளைக் கழகங்கள் சார்பில் அமைக்கப்பட்டுள்ள. தந்தை பெரியார். பேரறிஞர் அண்ணா. முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்வதுடன் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளை புதுப்பித்தும் கொடிக்கம் பங்களை புதுப்பித்தும் அவற்றில் கழகக் கொடி ஏற்றி. இனிப்பு வழங்கி. கழக கொள்கை விளக்கப் பாடல்களை ஒலிபரப்பச் செய்து எழுச்சியுடன் கொண்டாடுவோம் என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

தீர்மானம் 05

மார்ச் 1 ஆம் தேதி அன்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் அடங்கிய மாநகராட்சி. நகராட்சி. பேரூராட்சிகளில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு மோதிரம் (கணையாழி) அணிவிப்பதுடன். பால். பழம். ரொட்டி. மற்றும் பேபி கிட்ஸ். இனிப்பு வழங்கி சிறப்பிப்பதென்று இக்கூட்டம்தீர்மானிக்கிறது.

தீர்மானம் 06

அரசு பேருந்துகளில் மகளிர் கட்டணமில்லாமல் பயணிக்கும் விடியல் பயணம். மகளிர்க்கு மாதந்தோறும் ரூபாய். 1000 வழங்கிடும் கலைஞர் உரிமைத் தொகைத் திட்டம். நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் மகளிர் பெயரில் வீடு ஒதுக்கிடு. திருக்கோவில்களில் பெண் ஒதுவர்கள் நியமனம் என்று பெண்களை முன்னிலைப் படுத்தி அவர்கள் சொந்தக் காரில் நின்றிடும் வகையில் பெண்களுக்கு தாய்வீட்டு சீதனமாக பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்திடும் முதல்வர் மு.க.ஸ்டாரின் அவர்கள் புகழைப் பாடும் வகையில் பெண்களே பங்கேற்கும் கருத்தரங்கம். கல்லூரி மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் வழங்கிடும் புதுமைப் பெண் திட்டம். கல்லூரி மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கிடும் தமிழ்ப் புதல்வன் திட்டம் என்று கல்லூரி மாணவர்களுக்கு. உயர் கல்வி மாணவர்களுக்கு படிப்பதற்கு மட்டுமல்ல அவர்கள் வேலை வாய்ப்பு பெறவும் தீட்டப்பட்ட திட்டம் தான் 'நான் முதல்வன் திட்டம்'. இப்படி கல்லூரி மாணவர்களுக்கு இளைஞர்களுக்கென்றே திட்டங்களை தீட்டிய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களை பாராட்டிடும் வகையில் கல்லூரி மாணவர்கள் பங்கேற்றிடும் பேச்சுப்போட்டிகள். விளையாட்டுப் போட்டிகள் நடத்தி தள பதி கோப்பை வழங்குவதென்றும்.

பள்ளியில் படிக்கும் சிறார்கள் காலையில் உணவின்று வாடுவதினை அறிந்து இன்றைக்கு 20 இலட்சம் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம் வழங்கி ஒரு தாயுமானவராகத் திகழும் முதல்வர் மு.க.ஸ்டாரின் அவர்களின் புகழைப் போற்றிடும் வகையில் பள்ளி சிறார்களுக்கு கல்வி உபகரணப் பொருட்களை வழங்குவதன்றும் இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

தீர்மானம் 07

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை. முன்னிட்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் முழுவதும் கழக நிகழ்ச்சிகள் நடத்துவதென்றும். மாநகராட்சி நகராட்சி. ஒன்றியம். பேரூராட்சி. கிளைக் கழகங்களில் பொதுக்கூட்டங்கள். தெரு முனைக் கூட்டங்கள். கருத்தரங்கம். பட்டிமன்றம். மரக்கன்றுகள் நடுதல். அறு சுவை உணவு வழங்குதல் என்று அனைவரும் வாழ்த்திடும் வகையில் மாபெரும் 72 தொடர் நிகழ்ச்சிகளை நடத்தி கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை எழுச்சியுடனும். பார்போற்றும் வகையிலும் கொண்டாடுவது என்றும் இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் கூறியுள்ளார்.

மதுரை தமுக்கம் மாநாட்டு மையத்தில், நேற்று (15-02-2025) திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதியை இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும், அரசியல் மற்றும் மத்தியக் குழுவின் ஒருங்கிணைப்பாளருமான பிரகாஷ் காரத் சந்தித்துப் பேசினார். நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மற்றும் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன் ஆகியோர் உடனிருந்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.2.2025) சென்னையில் நடைபெற்ற எஸ். அருள் கண்ணன் – அ.ஜெய மனோகரி தம்பதியரின் மகன் தக் ஷிணா தனுஜ் விநாயகி (எ) சுவேதா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்

சாதனை முதல்வரின் பிறந்தநாள்:

சென்னை கிழக்கு மாவட்டத்தில் நல உதவிகள் வழங்கி சிறப்புமிகு விழா!

மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்; மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதிக்கழக செயலாளர்கள், வட்டகழக செயலாளர்கள் ஆலோசனைக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

சென்னை, பிப்.16-

சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதிக்கழக செயலாளர்கள், வட்டகழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று (15.02.2025 சனிக்கிழமை) மாலை 5.00 மணி அளவில், சென்னை வில்லிவாக்கம், MPH சாலையில் உள்ள டி.கே.ஏ. திருமண மகாலில், அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: ப.தாயகம்கவி, அ. வெற்றிஅழகன், ஜோசப்சாமுவேல், மற்றும ப.ரங்கநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: கே. சந்துரு, எம்.விஜயகுமார், கே.எஸ்.எம்.நாதன், எஸ்.மணிமுடி, எம்.பி.எம்.ஷேக்அப்துல்லா, ஆர்.வரதன், மாவட்ட நிர்வாகிகள்: ஜி.மகாதேவன், புனிதவதிஎத்திராசன், பகுதிக் கழக செயலாளர்கள்: கூ.பி.ஜெயின், வே.வாசு, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், டிஎஸ்பி.ராஜகோபால், எம்டிஆர் நாகராஜ், சொ.வேலு. வி.சுதாகர், எஸ்.முரளி, தேர்தல் பொறுப்பாளர்கள்: பி.முனியாண்டி, இரா.நரேந்திரன், ஓ.ஏ.நாகலிங்கம், என்.கிருஷ்ணமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், வி.ரமேஷ் (எ) நீலகண்டன், ஏ.பி.பூர்ணிமா, பி.ஜே.துளசிங்கம், அ.நிர்மலா தேவி, எம்.இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: ஜே.பாலமுருகன், எஸ்.தனசேகர், க.வினோத், ஜி.ஜே.பிரபு, வானவில்விஜய், எல்.பி.எஃப். மோகன், எம்.பிரோஸ்கான், பி. விஜயகுமார், எம்.விநாயகம், து.ஆயிரம், துரைக்கண்ணன், இரா.வீரமணி, மா.அசோக்குமார், கு. கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜாமுகம்மது, ஜி.பி.பிரதீப்குமார், ஆர்.எஸ்.சித்திக், எல்.சம்பத்குமார், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி மற்றும் வட்டகழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர். இக் கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் ஆர்.தீனதயாளன் நன்றி கூறினார்.

தீர்மானங்கள்:

தீர்மானம்: 1

2019 முதல் நடைபெற்ற இரண்டு நாடாளுமன்ற தேர்தல்கள், சட்டமன்ற பொது தேர்தல், உள்ளாட்சி அமைப்பு தேர்தல்கள் இடைத்தேர்தல்கள் என அனைத்திலும் கள்ளக் கூட்டணி திரை மறைவு கூட்டணி வாக்குகளை சிதறடிக்கும் கூட்டணி என எதிரிகள் எத்தனை கெட்டப் போட்டு வந்தாலும் அதையெல்லாம் முறியடித்து தொடர்ந்து வெற்றி கொடி நாட்டும் கழகத் தலைவரின் திராவிட மாடல் ஆட்சிக்கு மகுடம் சூட்டிய வெற்றிதான் ஈரோடு கிழக்கு தொகுதி மக்கள் அளித்த வெற்றி. இந்த வெற்றிக்கு முழு முதல் காரணமான கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும்கழகநிர்வாகிகளுக்கும் இக்கூட்டம் மனமார்ந்த பாராட்டையும் நன்றியையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

தீர்மானம்: 2

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தொடர்ந்து தமிழ் நாட்டை வஞ்சித்து வரும் ஒன்றிய அரசை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் கண்டன கூட்டங்கள் நடத்தி எதிர்ப்பை தெரிவித்து, எத்தனை இடையூறு வந்தாலும் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பணிகள் தொடரும்மாநில உரிமையை நிலைநாட்ட போராட்ட குரல் ஒலிக்கும் என அறைகூவல் விடுத்த முதலமைச்சர் அவர்களின் கரத்தை வலுசேர்க்கும் வகையில் வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் நம் கழகத் தலைவரின் இலக்காம் 234 க்கு 200 என்ற இலக்கை அடைய சென்னை கிழக்கு மாவட்டம் தன்னை முழுவதுமாக அர்ப்பணிக்கும் என்ற உறுதியை ஏற்று இக் கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

தீர்மானம்: 3

திராவிட மாடல் ஆட்சியால் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றி தமிழ்நாட்டின் அபரிதமான வளர்ச்சிக்கு வித்திடுகின்ற சாதனையரசர் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72-வது பிறந்த நாளை சீரும் சிறப்புமாக மகிழ்ச்சியோடு அவர் என்னப்படி நலத்திட்ட உதவிகளும், அவரது புகழுக்கு புகழ் சேர்க்கின்ற வகையிலும், சாதனைகளை விளக்குகின்ற வகையிலும் புகழ ரங்கம் மற்றும் கழக சாதனை விளக்க பொது கூட்டங்களை நடத்திட முடிவு செய்து இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

இவ்வாறு மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

திருநீர்மலை த.ஜெயக்குமார் வரவேற்புரை! பம்மல் 3வது வட்டச் செயலாளர்

அனகை க.மோகன் இல்லத் திருமணம்! அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில்!

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. – இ.கருணாநிதி எம்.எல்.ஏ. – எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. வாழ்த்துரை!

காஞ்சிபுரம், பிப். 16-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்குப் பகுதி, 3வது வட்டக் கழகச் செயலாளர் அனகை க.மோகன் - மோ.மஞ்சுளா ஆகியோரின் புதல்வி எம்.பிரியாவுக்கும் சென்னை, ராமாபுரம் எம்.சுப்பிரமணி - தேவி ஆகியோரின் புதல்வர் எஸ்.ராஜேஸ்கண்ணனுக்கும் திருமணம் இன்று (16.2.2025 -ஞாயிறு) காலை 6 மணியளவில் பம்மல் நெடுஞ்சாலை, எஸ்.எஸ். மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இத்திருமணத்தில் பகுதிக் கழகச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயக்குமார் வரவேற்புரையாற்றுகிறார்.

தா.மோ.எழிலரசன், எஸ்.கே.நெப்போலியன், கே.சந்திரன், மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, ச.பிரபு, சி.பார்த்தசாரதி, இரா.பாபுஜி, ஆர்.குமரேசன், க.சுந்தரமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இத்திருமணத்தை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் எம்.எல்.ஏ. தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

இம்மணவிழாவில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இம்மணவிழாவில் மீ.அ.வைதியலிங்கம், படப்பை ஆ.மனோகரன், அ.தமிழ்மாறன், எஸ்.சதீஷ், வசந்தகுமாரி, கோ. காமராஜ், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, பெருங்களத்தூர் எஸ்.சேகர், த.விஸ்வநாதன், பெருங்குடி ரவிச்சந்திரன், வி.எட்டியப்பன், ஏ.வந்தேமாதரம், கோ.சத்திய மூர்த்தி, கோல்டு டி.பிரகாஷ், பேராசிரியர் எல்.பிரபு, பி.கே.ஏ.சத்திய பிரபு, இரா.பொன்ராம், கா.ரவி, மு.ரஞ்சன், இரா.நரேஷ்கண்ணா, மு.நித்தியானந்தம், டி. புருஷோத்தமன், அரவிந்த் மனோகரன், ப.அன்பழகன், முநிதமிழ்குமரன், ப.ஆண்டவன், இ.பாலாஜி, டி.எம்.ஜோசப், இரா.ஸ்ரீதர், ம.மதன், ஜி.ரகு, ஆர்.எம்.முருகன், கே.பி.சுப்ரமணி, பி.ஆர்.ரவி, ஆர்.கே.நரசிம்மன், வி.முரளி, கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார், சித்ரா தமிழ்குமரன், சண்முக சுந்தரி ஜெயக்குமார், சித்ரா தேவி முரளிதரன், பி.சிவசங்கரய்யா, சா.குணா, எம்.டி.விஜயகுமார், கே.எஸ்.பாபு, அ.கருணாகரன், க.பசுபதி, இ.சோமு, செ.சவரிமுத்து, ஜி.கே.அரவிந்த், ந.மூவேந்தன், விமலா ஜோஸ்பின், எஸ்.லாசர், எஸ்.மௌலிராஜ், எம்.சரவணன், பி.டேனியல் சந்துரு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர். என்.சி.மோகன், க.விநாயகம், ஜி.கே.பழனி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.